**THE LABOUR COURT, SALEM**
**CAMP COURT AT DHARMAPURI**
**I.D.No. 54 Of 2018**

**<u>20.06.2025</u>**

**RW1 – திரு. முனிராஜ்**

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை – (மனுதாரர் தரப்பில்)

நான் பணியிலிருந்து ஓய்வு பெற்று 5 வருடங்கள் ஆகிறது. இவ்வழக்கில் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்குமாறு அழைப்பாணை எதுவும் வரவில்லை. மனுதாரரை பணிநீக்கம் செய்வதற்கு முன்பு நடந்த குடும்ப விசாரணையில் நான் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரிதான். 03.11.2016 ல் நான் கொடுத்த பரிசோதணை அறிக்கை 7148 என்றால் சரிதான். இதில் எந்த இணைப்புகளும் இணைத்து கொடுக்கவில்லை என்றால் சரிதான். பரிசோதணை அறிக்கையில் நான் நேரத்தை குறிப்பிட்டுள்ளேன் என்றும், கடிகாரத்தில் உள்ளவாறு 12 மணிநேர கால அளவு நேரத்தை குறிக்கவில்லை என்றால் சரிதான். 03.11.2016 பரிசோதணை அறிக்கையில் குறிப்பிட்டுள்ள Invoice ஐ நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பயணச்சீட்டு விநியோகத்தில் உள்ள குறைகளை கண்டுபிடிக்க வேண்டும் மற்றும் ஆய்வு செய்ய வேண்டும் என்றால் Invoice அவசியம் என்றால் சரிதான். பயணி, ஓட்டுநர் மற்றும் நடத்துநர் வாக்குமூலம் கொடுத்ததாக எ.ம.சா.3 முதல் 5 ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனறால் சரிதான். அதற்கான பேப்பர்களை எங்கே வைத்திருந்தேன் என்றால் நாங்க்ள் வைத்திருந்த பேப்பரை அவர்களிடம் கொடுத்து எழுதி வாங்கப்பட்டது. பயணியின் வாக்குமூலத்திலும், ஒட்டுநர் வாக்குமூலத்திலும் நடத்துநர் பழைய பயணச்சீட்டை விநியோகம் செய்திருந்தது தெரியவந்ததாக சொல்லவில்லை என்றால் சொல்லவில்லை. என்ன நடந்தது என்று அவர்களுக்கு தெரியாது. நடத்துநர் தன்னுடைய வாக்குமூலத்தில் செய்த

தவறை ஒப்புக்கொண்டு சம்மதம் என்று கடிதத்தில் தெரிவித்துள்ளாரா என்றால் இல்லை. தர்மபுரியில் உள்ள போக்குவரத்துக்கழகத்திற்கு சான்றளிக்கப்பட்ட நிலையாணை உள்ளதா என்றால் தெரியவில்லை. நடத்துநர் 03.11.2016 ம் தேதிக்கு முன்பு எந்த தேதி முதல் தொடர்ச்சியாக இடையில் ஓய்வு இல்லாமல் வேலை செய்துகொண்டிருந்தார் என தெரியுமா என்றால் தெரியவில்லை. பயணி கொடுத்த வாக்குமூலத்தில் டிக்கட் செக்கிங் தொப்பூர் டோல்கேட் பக்கம் ஏறி விசாரித்துள்ளார்கள் என்று சொல்லியுள்ளது சரியா என்றால் சரியில்லை. மனுதாரர் 03.11.2016 ல் பணிபுரிந்த பேருந்தின் வசூல் இலக்கு ரூ.15,847/- என்றால் சரிதான். ஆனால் நாங்கள் தணிக்கை செய்தபோது அன்றைய தேதியில் நடத்துநர் வசூல் செய்த தொகை ரூ.16,092/- என்றால் சரிதான். இந்த வசூல் தொகை ரூ.16,092/-ஐ மனுதாரர் கழகத்தில் செலுத்தியுள்ளார் என்றால சரிதான். Ex.R6 ஆவணத்தில் கண்டுள்ள செலவுத்தொகை குறித்து ஓட்டுநர், நடத்துநர் வாக்குமூலத்தில் எதுவும் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். என்னுடைய பரிசோதனையின்போது பயணிகளிடம் பாக்கி தொகை வரவேண்டியுள்ளதா என விசாரித்து உறுதி செய்யவில்லை என்றால் சரிதான். செலவுத்தொகைக்கு ரசீதோ, Voucher ஓ கைப்பற்றி தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் பேருந்தில் ஏறி தணிக்கை செய்தபோது எந்த பயணியும் தானாக முன்வந்து நடத்துநர் மீது புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். என்னுடைய சாட்சிய பிரமாண வாக்குமூலத்தில் நடத்துநர் எந்த எண் உள்ள பழைய பயணச்சீட்டை மறு விநியோகம் செய்திருந்தார் என சொல்லவில்லை என்றால் சரிதான். நான் சொல்லும் பழைய பயணச்சீட்டு எந்த தேதியில் மனுதாரருக்கு கொடுக்கப்பட்டது என்பதை காட்ட பிரத்யோக பட்டியல் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். 04.11.2016 தேதிய பரிசோதனை அறிக்கையின் எண்.18510 என்றால் சரிதான். என்னுடைய பணியில் புகார் கணக்கை காட்டுவதற்காகவும், புள்ளிவிபர கணக்கிற்காகவும் மனுதாரர் பழைய பயணச்சீட்டை மறுவிற்பனை செய்ததாக பொய்யாக அறிக்கை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர்

அவருடைய பணியில் பழைய பயணச்சீட்டு எதையும் விற்பனை செய்யவில்லை என்றால் சரியல்ல. முதல் விசாரணைக்கு நான் தாக்கல் செய்துள்ள சாட்சிய வாக்குமூலம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரிதான்.

மறுவிசாரணை இல்லை.

Sd/ (M. Shanthi)
Presiding Officer,
Labour Court, Salem